**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.225/2018**

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 13.082025 | கணவர் பெயர்: | சௌந்தராஜன் |
| பெயர்: | விஜயலெட்சுமி (DW- 1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | சீர்காழி | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 52/2025 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 13.08.2025</u>**

1. 2–ம் பிரதிவாதி எனது மகன். வாதி ஜெயபால் குடியிருப்பது எனது வீட்டிற்கு கிழக்கு பக்கம் என்றால் சரிதான். வாதியின் சொத்தை A அட்டவணை சொத்து என்றும், பிரதிவாதியின் சொத்தை B அட்டவணை சொத்து என்றும் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி ஜெயபாலன் சொத்திற்கு பின்புறமாக வாதிக்கு பூர்வீக சொத்து உள்ளது என்றால் சரிதான். வாதி 14.07.1971–ல் தாவா சொத்தை சம்மந்தம்பிள்ளை என்பவரிடமிருந்து கிரயம் பெற்றார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா A அட்டவணை சொத்தில் தரைத்தளத்தில் கடந்த 1972–ல் வாதி வீடு கட்டிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு 1990–ல் தான் திருமணம் நடைபெற்றது. அதன்பிறகுதான் நான் அங்கு வந்தேன். எனக்கு 1990–ல் திருமணம் நடைபெற்றதைஉறுதி செய்ய திருமண பத்திரிக்கையை தாக்கல் செய்யலாமா என்றால் என்னிடம் தற்போது இல்லை.

2. அதேபோல் கடந்த 2003–ல் முதல் தளம் வாதியால் கட்டப்பட்டதா என்றால் ஆமாம். அதில் வாதி இடத்தையும் எனது இடத்தையும் பிரிப்பதற்கு

இடையில் காம்பவுண்ட் சுவர் உள்ளதா என்றால் உள்ளது. தாவா இடத்தை நீதிமன்ற ஆணையர்/வழக்கறிஞர் கடந்த 26.06.2018–ல் பார்வையிட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் நான் அப்போது அங்கு இல்லை 2–ம் பிரதிவாதி இருந்தார். நீதிமன்ற ஆணையர்/வழக்கறிஞர் தாவா இடத்தை பார்வையிடுவதற்கு முன்பாக அறிவிப்பு கொடுத்தை நானும், 2–ம் பிரதிவாதியும் வாங்க மறுத்துவிட்டோமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர்/வழக்கறிஞர் அவரது அறிக்கையில் காம்பவுண்ட் சுவருக்கு 2 ½ அடி தள்ளி வாதி வீடு கட்டியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. நான் எனது எதிர்வழக்குரையில் நாங்கள் குடியிருந்து வருகின்ற இடமான தாவா B அட்டவணை சொத்தை எனது கணவருக்கு அவரது தந்தை செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் கடந்த 10.01.1977–ல் எழுதி வைத்துள்ளார் என கூறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அந்த பத்திரத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது கணவர் சௌந்தராஜனுக்கு பட்டா கொடுத்ததாக 11.11.2014–ல் உள்ளது என்றால் சரிதான். அசல் செட்டில்மெண்ட் ஆவணத்தை தாக்கல் செய்தால் உண்மையான பரப்பளவு தெரிந்துவிடும் என்ற காரணத்தினால் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாவா B அட்டவணை சொத்தில் ஏற்கனவே இருந்தகூறை வீட்டை பிரித்து விட்டு தற்போது அரசு சார்பில் கட்டி தரும் காண்கீரிட் வீட்டினை எப்போது கட்டினேன் என்றால் சுமார் 7 வருடத்திற்கு முன்பு கட்டினேன்.

4. மேற்படி B அட்டவணை சொத்தில் வீடு கட்டுவதற்கு நகராட்சியிடம் முறையாக அனுமதி பெற்றுள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதை எனது நாத்தனாரிடம் தான் கேட்க வேண்டும். நான் வீடு கட்டுவதற்கு நகராட்சியிடம் அனுமதி பெறவில்லை என்றால் சரியல்ல. என்னிம் காட்டப்படும் வா.சா.ஆ.10 ஆவணமான புகைப்படத்தில் காம்பவுன்ட் சுவரை ஒட்டி எனது

வீட்டின் அஸ்திவாரம் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அவர் அறிக்கையில் காம்பவுன் சுவரை ஒட்டி மேற்கே ½ அடி விட்டுதான் அஸ்திவாரம் போடப்பட்டுள்ளது என்று அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது தவறு 1 அடி விட்டுள்ளோம். நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு எனது தரப்பில் எவ்வித ஆட்சேபணையும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. நகராட்சி விதிபடி வீடு கட்ட வேண்டும் என்றால் அடுத்தவர் வீட்டில் இருந்து 3 அடி துாரம் தள்ளிதான் கட்ட வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் அவ்வாறு கட்டாததால்தான் நகராட்சியிடமிருந்து அனுமதி பெறவில்லை என்றால் சரியல்ல. நான் குடியிருந்து வரும் இடம் வாய்க்கால் புறம்போக்கு என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு மேற்கில் கழுமலையாறு என்ற பாசன வாய்க்கால் ஓடுகிறது என்றால் சரிதான்.நான் தற்போது வீட்டை கட்டி முடித்துவிட்டேன் என்றால் சரிதான். அதனால் நான் வாதி வீட்டிற்கு மேற்கு புறமாக வரக்கூடிய சூரிய ஒளி, காற்று, வெளிச்சம் இவற்றை தடை செய்தேன் என்றால் சரியல்ல. அவ்வாறு தடை செய்யக்கூடாது 3 அடி துாரம் தள்ளி வீடு கட்டிக்கொள்ள வாதி கூறியதையும் மீறி நான் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி வீட்டிற்கு மேற்கு புறமும்,கிழக்கு புறமும் வருகின்ற சூரிய ஒளி, காற்று, வெளிச்சம் ஆகியவற்றை 20 வருடங்களுக்கு மேலாக அனுபவித்து வருவதை தடை செய்து நான் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல.

6. வாதி வீட்டிற்கு மேற்கு பக்கமாக வருகின்ற சூரிய ஒளி, காற்று, வெளிச்சம் இவற்றை நான் வாதி 20 வருடங்களுக்கு மேலாக அனுபவித்து வருவதால் அவருக்கு வசதி உரிமை உள்ளது என்றாலும், அதனை நான் தடை செய்வதற்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. அதனால் வாதி கோருகின்ற விளம்பல் பரிகாரம் வாதிக்கு கிடைக்க கூடியது என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் அதை தடை செய்து நான் கட்டிய கட்டுமானங்களை அப்புறப்படுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

பிராதுபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணம் என்பது வழக்கிற்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அதனால் எங்கள் ஆவணப்படி எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்க கூடியதல்ல என்றால் சரியல்ல. வாதி அவரது வீட்டை முறைப்படி நகராட்சியிடம் அனுமதி பெற்று கட்டியுள்ளார் என்றாலும், நான் தான் அனுமதி பெறாமல் கட்டியுள்ளேன் என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.

மறு விசாரணை இல்லை.